# டாக்ஸி மற்றும் தனியார் வாடகை வாகனம் பற்றிய தகவல்கள்

## டாக்ஸி மற்றும் தனியார் வாடகை வாகனச் சேவைகள்

டாக்ஸிகள் (கறுப்பு 'காப்' கார்கள்) மாத்திரமே வீதிகளிலும் விதிக்கப்பட்ட டாக்ஸி தரிப்பிடங்களிலும் வைத்து சேவைக்கு அமர்த்தப்படக்கூடிய வாகனங்களாகும். டாக்ஸிகள் அனைத்தும் கட்டண மானி பொருத்தப்பட்டவை. செலுத்தவேண்டிய கட்டணத்தைப் பயண முடிவில் மானி காட்டும். அத்துடன் அது 'டாக்ஸி' என்பதை மஞ்சள் நிற வெளிச்சத்தில் புலப்படுத்தும்.

தனியார் வாடகை வாகனச் சேவையில், 'மினிகாப்' புக்கள், ஆடம்பர வாகனங்கள், நிறைவேற்று அலுவலர்க்கான சிறப்புக் கார்கள், சாரதி செலுத்தும் வாகனங்கள் என்பன உட்பட பல்வேறு வகை சேவைகள் அடங்கும். 'மினிகாப்' மற்றும் தனியார் வாடகை வாகனப் பயணங்கள் அனைத்தும் உரிமம் பெற்ற தனியார் சேவையாளருடன் முற்பதிவு செய்யப்பட வேண்டும் - முற்பதிவு இல்லாது சேவையில் ஈடுபடும் 'மினிகாப்'புகளும் தனியார் வாடகை வாகனங்களும் உரிமம் அற்ற, காப்புறுதியற்ற, பாதுகாப்பற்ற மற்றும் சட்டவிரோத வாகனங்களாக இருக்கலாம்.

## இழந்த உடைமைகள்

டாக்ஸியில் இழந்துவிட்ட உடைமைகள் பற்றி இலண்டனுக்கான போக்குவரத்து அமைப்பின் (Transport for London's (TfL)) இழப்புடைமை அலுவலகத்துக்கு (Lost Property Office) அறிவிக்கவேண்டும். அலுவலகத்துக்கு நீங்கள் **0845 330 9882*** என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம். அல்லது உடைமை கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதாவென அறிய **tfl.gov.uk/lpo** என்ற இணையதளத்தில் உள்ள இழந்த உடைமைப் படிவத்தைப் பயன்படுத்தலாம்.

டாக்ஸி ஒன்றில் இழக்கும் உடைமைகள் இழப்புடைமை அலுவலகத்தில் சேர

ஏழு நாட்கள் வரை எடுக்கலாம்.

தனியார் வாடகை வாகனங்களில் கண்டுபிடிக்கப்படும் உடைமைகள் சம்பந்தப்பட்ட சேவை இயக்குனரின் அலுவலகத்தில் வைக்கப்படும். அங்கே இழந்த உடைமைகள் பதிவேடு ஒன்று உள்ளது.

உங்கள் உடைமைகளைக் கண்டுபிடித்தார்களா என்றறிய நீங்கள் முற்பதிவு செய்துகொண்ட சேவை இயக்குனரைத் தயவு செய்து விசாரியுங்கள்.

## 4 ஏப்ரல் 2009 முதல் டாக்ஸி கட்டணங்கள்

குறித்த ஒரு நாளில் ஒருவர் பயணம் செய்யும் நேரம், தூரம் மற்றும் டாக்ஸியின் வேகம் ஆகியவற்றின் அடிப்படையில் மானி அதிகபட்ச கட்டணத்தைக் கணிக்கிறது. சரியான காரணம் இருந்தாலொழிய ஓட்டுனர்கள், 12 மைல்கள் வரை கொண்டுசெல்ல (ஹீத்ரோ விமானநிலையத்திலிருந்து 20 மைல்கள் வரை) அல்லது பயணியின் சேருமிடம் பெரும்பாக இலண்டனில் இருந்தால், ஒரு மணி நேரம் வரை நீடிக்கும் பயணத்துக்கு இணங்கவேண்டும்.

சேருமிடம் பெரும்பாக இலண்டனுக்கு வெளியே இருந்தால் ஓட்டுனர் வாடகைப் பயணத்தை ஏற்கத் தேவையில்லை. அவ்வாறான பயணத்துக்கான கட்டணத்தை ஓட்டுனரும் பயணியும் பேசித் தீர்மானித்துக்கொள்ளலாம்.

முறையான கட்டணங்கள் பின்கண்டவாறு அமையும்:
பயணத்தில் தாமதம் அல்லது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டால் கட்டணங்களும் நேரமும் இவற்றைவிட அதிகரிக்கலாம் என்பதைத் தயவு செய்து கவனத்தில் கொள்ளுங்கள்:

| மானியின் கட்டண குறியீடுகள் | | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|
| தூரம் | அண்ணளவான பயண நேரம்-நிமிடங்களில் | திங்கள் முதல் வெள்ளி வரை **06:00 – 20:00** | திங்கள் முதல் வெள்ளி வரை **20:00 -22:00** சனியும் ஞாயிறும் **06:00 – 22:00** | ஒவ்வோர் இரவும் **22:00 – 06:00** மற்றும் பொது விடுமுறை நாட்களும் |
| 1 மைல் | 5 - 12 | £4.60 - £8.20 | £4.80 - £8.20 | £5.00 - £8.40 |
| 2 மைல்கள் | 8 - 15 | £7.00 - £10.80 | £7.00 - £11.00 | £7.60 - £12.00 |
| 4 மைல்கள் | 15 - 30 | £11.00 - £18.00 | £13.00 - £18.00 | £15.00 - £22.00 |
| 6 மைல்கள் | 20 - 40 | £17.00 - £28.00 | £19.00 - £28.00 | £23.00 - £33.00 |
| ஹீத்ரோவுக்கும் மத்திய இலண்டனுக்கும் இடையே | 30 - 60 | £40.00 - £75.00 | | |

அனைத்து நேரங்களிலும் ஆகக் குறைந்த கட்டணம் £2.20 ஆகும்.

பொதிகளுக்கோ அல்லது மேலதிக பயணிகளுக்கோ கூடுதல் கட்டணங்கள் இல்லை.

கூடுதல் கட்டணங்கள் (இவை பயண ஆரம்பத்தில் மானியில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்):

- தொலைபேசியில் முற்பதிவு செய்தல்: £2.00 வரை;
- ஹீத்ரோ விமானநிலையம்: விமானநிலையத்திலிருந்து ஆரம்பிக்கும் பயணங்களுக்கு £2.00;
- நத்தார்/ புத்தாண்டு நாள்: 24 டிசம்பர் 20:00 மணிக்கும் 27 டிசம்பர் 06:00 மணிக்குமிடையிலான பயணங்கள் அல்லது 31 டிசம்பர் 20:00 மணிக்கும் 2 ஜனவரி 2010, 06:00 மணிக்குமிடையிலான பயணங்களுக்கு £4.00.

சில டாக்ஸிகள் க்ரெடிட் அல்லது டெபிட் அட்டைகளை ஏற்றுக்கொள்ளும். முறைப்படி மானிகாட்டும் கட்டணத்தில் 10% க்கும் 15% க்கும் இடையிலான கூடுதல் கட்டணம் இத்தகைய சந்தர்ப்பத்தில் அறவிடப்படும்.

டாக்ஸியை சேவையிலிருந்து அகற்றிச் சுத்தப்படுத்தும் அளவுக்கு அசுத்தப்படுத்தியமைக்காக ஓட்டுனர் வாடகைக்கு அமர்த்தியவரிடம் £40.00 வரை அசுத்தப்படுத்தல் கட்டணம் அறவிடலாம்.

## ரசீதுகள்

பயணத்தின்போது அல்லது பயண முடிவில் பயணி ரசீது கேட்டால் டாக்ஸி ஓட்டுனர்கள் அதனை வழங்கவேண்டும்.

## சுலபமாக ஏறக்கூடிய தன்மை

உரிமம் பெற்ற டாக்ஸிகள் யாவும் சக்கர நாற்காலியுடன் பயணி ஏறுவதற்கு ஏற்றவையாகஉள்ளன. அத்துடன்கைப்பிடி, சுழன்று பயணியை டாக்ஸி கதவருகில் ஏற்றி மீளும் இருக்கைகள், இடைநடுப்படி, செவிப்புலனற்ற அல்லது குறைந்தோருக்கு உதவும் உட்புறத் தொடர்பு சாதனம் மற்றும் உட்புறத் தொடர்புக் கருவி என்பன உட்பட, வாகனத்தில் சுலபமாக ஏறவும் பயணிக்கவும் உதவும் அம்சங்களை அவை கொண்டுள்ளன. டாக்ஸியில் செல்லும்போது சக்கர நாற்காலிகள் உறுதியாக நிறுத்தப்படவேண்டும். டாக்ஸியில் ஏறும்போது தயவு செய்து ஓட்டுனரிடம் ஆலோசனையும் உதவியும் கேளுங்கள்.

தனியார் வாடகை வாகனங்கள் பொதுவாக சலூன் கார்களாகவும் மக்கள் வாகனங்களாகவும் (people carriers) இருக்கும். இருப்பினும் சில தனியார் வாடகைக்கார் இயக்குனர்கள் சக்கர நாற்காலிகளுடன் பயணிகளை ஏற்றும் வசதி கொண்ட வாகனங்களை சேவையில் ஈடுபடுத்துகின்றனர். பயண முன்பதிவு செய்யும்போது விசேட ஏற்பாடுகள் எவையும் தேவையானால் அவற்றை சேவை இயக்குனர் கவனத்துக்கு கொண்டுவருவதை உறுதிப்படுத்துங்கள்.

உரிமம் பெற்ற அனைத்து டாக்ஸிகளும் தனியார் வாடகை வாகனங்களும் வழித்துணையாக வரும் நாய்களை மேலதிக கட்டணம் இன்றி ஏற்றிச்செல்கின்றன.

## பயணிகளுக்கான தகவல்கள்

இரண்டு உள் ஊர் உரிமம் பெற்ற 'மினிகாப்' இயக்குனர்களினது தொலைபேசி இலக்கங்களையும் ஒரு டாக்ஸி தொலைபேசி இலக்கத்தையும் நேரடியாக உங்கள் கைபேசிக்குத் தருவிப்பதற்கு 'காப்வைஸ்' வசதியைப் (Cabwise) பயன்படுத்துங்கள். 60835** என்ற இலக்கத்துக்கு HOME என்று வாசகச்செய்தி அனுப்புங்கள். இலக்கங்கள் நேரே உங்கள் கைபேசிக்கு அனுப்பப்படும்.

உரிமம் பெற்ற தனியார் வாடகை வாகனங்களின் இயக்குனர்கள் பற்றிய விபரங்களை, அவர்கள் வழங்கும் சேவைகளைப் பொறுத்து, (மினிகாப், ஆடம்பர வாகனம் முதலியன) தேடுவதற்கும் அவர்கள் சேவை வழங்கும் பிரதேசத்தை அறிவதற்கும் 'பைன்ட்எரைட்' வசதியைப் ('Findaride') பயன்படுத்துங்கள். பின்வரும் இணையதளம் செல்லுங்கள்:**tfl.gov.uk/findaride**

இலண்டன் எங்கும் இயங்கும் டாக்ஸி மற்றும் 'மினிகாப்' சேவை உட்பட, தனியார் வாடகை வாகன சேவைகள் பற்றிய தகவல்களுக்கு TfL அமைப்பின் 24 மணிநேர பயணத் தகவல் அழைப்பு நிலையத்துடன் **020 7222 1234** என்ற இலக்கத்தில் தொலைபேசித் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் பயணத்தைத் திட்டமிடுவதில் மேலும் உதவிக்கு பின்வரும் இணையதளம் செல்லுங்கள்: **tfl.gov.uk/traveltools**

## கருத்துக்கள் மற்றும் முறைப்பாடுகள்

இலண்டன் டாக்ஸி ஒன்று பற்றியோ அதன் ஓட்டுனர் பற்றியோ முறைப்பாடு செய்ய விரும்பினால், சம்பவம் நடைபெற்றதன்மேல், கூடிய விரைவில் நீங்கள்

எங்களுக்கு அதுபற்றி அறிவித்தல் வேண்டும்.
இணையதளமான **tfl.gov.uk/contactcabs** இல் கிடைக்கும் டாக்ஸி முறைப்பாடுகள் படிவத்தை இதற்குப் பயன்படுத்தலாம் அல்லது **coms@pco.org.uk** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது **0845 300 7000*** என்ற இலக்கத்துக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கலாம். இவற்றின் வழியாக நீங்கள் முறைப்பாடு செய்யலாம் அல்லது கிடைத்த சிறந்த சேவை பற்றிக் கருத்துக்கூறலாம். அது ஓட்டுனரின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுவதை நாங்கள் உறுதி செய்வோம்.

தனியார் வாடகை ஓட்டுனர் ஒருவரின் அல்லது சேவை இயக்குனரின் சேவை பற்றிய முறைப்பாடு எதுவும் நீங்கள் பயண முற்பதிவு செய்துகொண்ட சேவை இயக்குனரிடம் செய்யப்படவேண்டும். விளைவு திருப்திகரமாக இல்லாவிடில் அல்லது சேவை இயக்குனர் உங்கள் முறைப்பாட்டை திருப்திகரமாக கையாளவில்லையென நீங்கள் கருதினால் தயவு செய்து எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

* 0845 என்று தொடங்கும் இலக்கங்களைப் பொறுத்தவரை தொலைபேசி சேவை வழங்குவோரிடையே கட்டணங்கள் வேறுபடலாம்.

** விசாரணை ஒன்றுக்கு 35p என்ற விகிதத்தில் வாசகச்செய்தி அனுப்புவதற்கு கட்டணம் அறவிடப்படும். அத்துடன் செய்திக்கு வழமையான கட்டண விகிதம் அறவிடப்படும். சுற்றல் விகிதங்கள் (roaming rates) வெளிநாட்டு வலையமைப்புக்களுக்கு ஏற்புடையவை. 3 network வலையமைப்பு வாடிக்கையாளர்கள் வேறு தகவல்கள் தருதல் அவசியம். மேல்விபரங்களை **tfl.gov.uk/cabwise** என்ற இணையதளத்தில் காண்க.

இணையதளம்
**tfl.gov.uk**

24 மணிநேர பயணத்தகவல்கள்
**020 7222 1234**

இழந்த உடைமைகள்
**0845 330 9882**